# 4
# சூழலியல் அழகியலும் பேண்தகு அபிவிருத்தியும்

- இ. பிறேம்குமார்

---

## அறிமுகம்

*20* ஆம் நூற்றாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் தோன்றிய அழகியல் சார்ந்த துறைகளுள் ஒன்றாக சூழலியல் அழகியல் காணப் படுகின்றது. இயற்கை சூழல் பற்றிய ஆய்வுகள் முன்னொருபோதும் இல்லாத அளவிற்கு பல்வேறு துறைகள் சார்ந்த அறிஞர்களினாலும் ஆராய்ச்சியாளர்களினாலும் மேற்கொள்ளப்பட்டு வரும் இக்காலப் பகுதியில் சூழல் பற்றிய அழகியல் நோக்கு முக்கியத்துவம் பெறுகின்றது. சூழலியல் அழகியலில் அடிப்படை சிந்தனைகளை நாம் ஜேர்மானிய மெய்யியலாளரான இமனுவல் காண்டிடம் காணமுடிகின்றது. காண்ட் அளவிடமுடியா அழகு (Sublime Beauty) என்ற கருத்தின் அடிப்படையில் இயற்கை சூழலின் அழகினை எமக்கு அறிமுகப்படுத்துகின்றார். இத்தகைய நோக்கு சூழலியல் அழகியலின் ஆரம்பமாக அமைந்து விடுகின்றது. இயற்கை மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட சூழல் தொடர்பான அழகியல் சார்ந்த விடயங்களையும் மதிப்பீடுகளையும் உள்ளடக்கிய துறையாக சூழலியல் அழகியல் காணப்படுகின்றது. அழகியல் வரலாற்றில் சூழல் சார்ந்த அழகியலுடன் தொடர்புபட்ட நயத்தல் (Appreciation) என்பது பல வளர்ச்சி நிலைகளை கண்டுள்ளது. *18* ஆம் நூற்றாண்டில் இருந்து தற்காலம் வரை பல கட்டளைபடிம (Paradigm) மாற்றங்களை இந்தத் துறை கண்டுள்ளது. இவற்றை ஒன்றன் பின் ஒன்றாக நோக்குவோம். சூழலியல் அழகியலின் வளர்ச்சியினை கட்டளைபடிம அடிப்படையில் நோக்குதல் சூழலியல் அழகியலை புரிந்துகொள்வதற்கு மிக இலகுவான வழியாகும்.

இயற்கை மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட சூழல் தொடர்பான அழகியல் சார்ந்த விடயங்களையும் மதிப்பீடுகளையும் உள்ளடக்கிய துறையாக சூழலியல் அழகியல் காணப் படுகின்றது.

## புறவயமாக புலன்சார்ந்த மற்றும் வடிவம் சார்ந்த கூறுகளை கண்டுணர்தல் (கட்டளைப்படிமம் - I)

*18* ஆம் நூற்றாண்டு தொடக்கம் *20* ஆம் நூற்றாண்டின் மையப்பகுதி வரை இதன் செல்வாக்கு காணப்பட்டது. சூழலியல் அழகியல் சார்ந்த நயத்தலில் இயற்கை சூழலில் காணப்படுகின்ற புலன்சார்ந்த கூறுகளையும் வடிவம் சார்ந்த கூறுகளையும் பிரித்தெடுத்து நயப்பது இக்காலகட்டத்தில்

அழகியல் சார்ந்த நயத்தல் செயற்பாடாக காணப்பட்டது.[1] இக்காலகட்டத்தில் ஒரு கலைப்பொருள் (மனிதனால் உருவாக்கப்பட்டன) அதிக உயர்ந்த இடத்தினையும் மனிதனால் உருவாக்கப்படாத இயற்கை சூழல் சார்ந்த விடயங்கள் குறைந்த மதிப்பீட்டினையும் அழகியலாளர்கள் மத்தியில் கொண்டிருந்தன. இக்காலகட்டத்தில் இயற்கை உலகு தொடர்பான அழகியல் சார்ந்த நயத்தல் முக்கியத்துவம் இழந்திருந்தது (Carlson. A, 424). இக்காலகட்டத்தில் எல்லா விதமான இயற்கை சூழலின் அழகியல் அம்சங்களும் வெறுமனே புலன்சார்ந்த மற்றும் வடிவம் சார்ந்த கூறுகளுக்குள் அடக்கப்பட்டன. இக்காலகட்டத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்த புல்லோவின் (Bullough) உளவியல் தூரக்கோட்பாடு மற்றும் பெல்லின் (Bell) கலை பற்றிய கோட்பாடு என்பன கலை மீதே தமது கவனத்தை செலுத்தியிருந்தனவே தவிர இயற்கை சூழல் பற்றிய நோக்குகளுக்கு முக்கியத்துவம் வழங்கியிருக்கவில்லை.

இக்கால கட்டத்தில் ஒரு கலைப்பொருள் (மனிதனால் உருவாக்கப் பட்டன) அதிக உயர்ந்த இடத்தினையும் மனிதனால் உருவாக்கப் படாத இயற்கை சூழல் சார்ந்த விடயங்கள் குறைந்த மதிப்பீட்டினையும் அழகியலாளர்கள் மத்தியில் கொண்டிருந்தன.

## வடிவமைக்கும் அறிவு, கலை - வரலாறு சார்ந்த மரபுகள், கலை - விமர்சன ரீதியான செயற்பாடுகள் மற்றும் கலை உலகம் (கட்டளை படிமம் - II)

*20* ஆம் நூற்றாண்டின் மையப்பகுதியில் உருவான பகுப்பாய்வு அழகியல் இந்த கட்டளை படிமத்தை கொண்டு காணப்பட்டது. இந்த கட்டளை படிமம் ஏற்கனவே அழகியல் நயத்தலில் காணப்பட்ட முதல் கட்டளை படிமத்தை நிராகரித்திருந்தது. இந்த கட்டளை படிமத்திற்கு அடிப்படையாக கலையின் வெளிப்பாட்டுக் கோட்பாடு (Expressionist Theory of Art)[2] மற்றும் கலையின் நிறுவன ரீதியான கோட்பாடு (Institutional Theory of Art)[3] என்பன காணப்பட்டன. இந்த கட்டளை படிமம் அதிகம் கலையுடன் தொடர்புபட்டதாக இருந்ததே தவிர சூழலுடன் தொடர்புபட்டதாக இருக்கவில்லை. முதலாவது கட்டளை படிமம் சூழலுடன் தொடர்புபட்ட வகையில் முக்கியத்துவம் இழந்து காணப் பட்டதை போலவே இந்த கட்டளை படிமமும் சூழலுக்கு முக்கியத்துவம் வழங்கியிருக்கவில்லை. இக்காலப்பகுதியில் சில

1. வடிவம் சார்ந்த மற்றும் புலன்சார்ந்த கூறுகளை பாரம்பரிய அழகியலாளர்கள் கலைப் படைப்புக்களில் காண்கின்றனர். அவையாவன: கோடுகள், வடிவங்கள், ஒலி வேறுபாடுகள், வெவ்வேறு வடிவங்கள் மற்றும் நிறங்களின் கூட்டுக் கலவை, கலை படைக்கப்படும் பொருளின் தன்மை (தொடு உணர்வுத் தன்மை).

2. ஒளி மற்றும் இருள் கலையின் வெளிப்பாட்டுக் கோட்பாடு (Expression Theory of Art) - ஒரு கலைஞனின் மன உணர்வுகளின் வெளிப்பாடாக கலை நோக்கப்பட வேண்டும் என வாதிடுகின்றது. சிந்தனைகள் மற்றும் கருத்துக்கள் என்பவற்றினைக் காட்டிலும் உணர்வுகளுக்கு இக் கோட்பாடு முக்கியத்துவம் வழங்குகின்றது.

3. கலையின் நிறுவன ரீதியான கோட்பாடு (Institutional Theory of Art) கலை நிறுவனங்களான அருங்காட்சியகங்கள், கலைக்கூடங்கள் மற்றும் கலையுடன் அதிகாரம் பெற்ற மனிதர்கள் (கலைஞர்கள், சுவைஞர்கள், ஏற்பாட்டாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள்) இது கலை அல்ல என்ற தீர்மானங்களை மேற்கொள்கின்ற போது அது நிறுவன ரீதியான கலையாக கருதப்படுகின்றது.

அழகியலாளர்கள் இயற்கை உலகினை நயத்தல் என்பது அழகியல் சார்ந்த நயத்தல் அல்ல என வாதிட்டனர். இத்தகைய சூழ்நிலைகள் சூழலியல் அழகியலின் வளர்ச்சிக்கு காரணங்களாக அமையத் தொடங்கின. இத்தகைய மாற்றங்கள் 20ஆம் நூற்றாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் ஆரம்பித்துவிட்டன எனலாம்.

**பின்வரும் காரணங்களை சூழலியல் அழகியலின் வளர்ச்சிக்கு அடிப்படையாக கருத முடியும்.**

1. சூழலியல் அழகியலின் பண்பு தொடர்பாக எழுந்த ஒரு புதிய பொதுமக்கள் விழிப்புணர்வு
2. சூழலியல் அழகியல் தொடர்பாக முதலாம் கட்டளை படிமத்தை தவிர வேறு கோட்பாட்டு ரீதியான வளர்ச்சி காணப்படாமை.
3. சூழலியல் அழகியல் சார்ந்த விடயங்களுடன் தொடர்புபட்டவர்கள் சூழலியல் சார்ந்த கட்டட அமைப்பு நிர்மாணவியலாளர்கள் (Landscape Architects),[4] சூழலியல் சார்ந்த திட்டமிடலாளர்கள் (Environmental planners) மற்றும் சூழலியல் சார்ந்த கட்டட அமைப்பு மதிப்பீட்டாளர்கள் மற்றும் சூழலியல் சார்ந்த கட்டட அமைப்பு மதிப்பீட்டாளர்கள் (Landscape Assessors) அவர்களது சூழல் சார்ந்த அணுகுமுறைகளில் புலன்சார்ந்த மற்றும் வடிவம் சார்ந்த கூறுகளை முக்கியப்படுத்தியிருந்தமை.
4. சூழலியலாளர்கள் (Environmentalists) என்ற பிரிவினர் முதலாம் கட்டளை படிமத்திற்கு எதிராகவும் வாழ்விட பிரதேச முகாமைத்துவத்தில் (Landscape Management) அதன் பயன்பாட்டிற்கு எதிர்ப்பு தெரிவித்தமை.
5. சிலர் முதலாவது கட்டளை படிமம் சூழலின் ஒரு பகுதியினை தவிர்க்கின்றது எனக் கருதியமை.
6. இன்னும் சிலர் இயற்கை உலகினை அழகியல் ரீதியாக நயத்தல் என்பது அடிப்படையில் அகவயமானதாகவும் பெறுமதி குறைந்த தாகவும் கருதுவதுடன் சூழலியல் பிரச்சினை தொடர்பாக இத்தகைய நயத்தல் எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தும் என நம்பியமை

இன்னும் சிலர் இயற்கை உலகினை அழகியல் ரீதியாக நயத்தல் என்பது அடிப்படையில் அகவயமான தாகவும் பெறுமதி குறைந்த தாகவும் கருதுவதுடன் சூழலியல் பிரச்சினை தொடர்பாக இத்தகைய நயத்தல் எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தும் என நம்பியமை

மேற்குறிப்பிட்ட காரணங்கள் சூழலியல் அழகியலின் தோற்றத்திற்கு அடிப்படைகளாக இருக்கின்றன.

---

4. வாழ்விடப் பிரதேச கட்டடக் கலை (Landscape Architecture)- இது ஓர் பிரதேசத்துடன் தொடர்புபட்ட வாழ்விடப் பிரதேச வடிவமைப்பு, கட்டட அமைப்பு, திட்டமிடல்கள், நீர்நிலை முகாமைத்துவம், இயற்கைச் சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகள், பூங்காக்கள் மற்றும் பொழுதுபோக்கு திட்டமிடல்கள், பசுமை சார்ந்த அடிக்கட்டுமான திட்டமிடல்களும் சட்டங்களும், குடியிருப்புக்கள் மற்றும் தனிப்பட்ட நிலங்கள் தொடர்பான திட்டமிடல்கள் மற்றும் வடிவமைப்புக்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

## சூழலியல் அழகியலின் தோற்றமும் இப்பேனின் (Hepburn) வாதங்களும் கருத்துக்களும்

இப்பேன் மேற்குறிப்பிட்ட குறைபாடுகளில் இருந்து விடுபட்ட சூழலியல் அழகியல் கோட்பாடு ரீதியாகவும் பிரயோக ரீதியாகவும் வளர்ச்சி பெறுவதற்கு தனது கருத்துக்களையும் வாதங்களையும் தற்கால அழகியலும் இயற்கை அழகின் புறக்கணிப்பும் (Contemporary Aesthetics and the Neglect of Natural Beauty) (1966) என்ற படைப்பில் வெளிப்படுத்தி யிருந்தார். இயற்கையினை நயத்தலில் பகுப்பாய்வு அழகியலின் அணுகுமுறைகளை இவர் விமர்சித்திருந்தார் (இரண்டாவது கட்டளை படிமம்). சில அழகியலாளர்கள் இயற்கை உலகில் அழகியல் சார்ந்த குறைபாடுகள் உள்ளன என்றும் இயற்கை உலகினை நயத்தல் செயன் முறையானது பெறுமதி குறைந்ததாகவும் அகவயமானது என்றும் கருதி இயற்கை உலகினை நயத்தல் என்பது அழகியல் தன்மை அற்றது என குறிப்பிட்டனர். ஆனால் அழகியலாளர்களின் இத்தகைய நோக்கு தவறானது என இப்பேன் குறிப்பிடுகின்றார். இக்பேனின் கருத்துப்படி ஒரு கலைப்பொருளை நயத்தலில் இருந்து முற்றிலும் வேறுபட்ட வகையாக இயற்கை உலகினை நயத்தல் காணப்படுகின்றது. இயற்கையினை அழகியல் ரீதியாக நயத்தல் என்பது இயற்கையினை இயற்கையாகப் பார்த்தல் மட்டுமல்லாமல் இயற்கையினை கலையாக பார்க்காமல் இருப்பதும்தான் என்ற பட் மல்கமின் கருத்து இங்கு நோக்கத்தக்கது. (Malcom, 1996:207-208). இவ்வகையில் இயற்கை உலகினை அழகியல் ரீதியாக நயத்தல் மிகவும் உயர்ந்த அழகியல் அனுபவமாகும் என்று கருதும் இப்பேன் இரண்டாம் கட்டளை படிமத்திற்கு எவ்வகையிலும் இடையூறு விளைவிக்காமல் இயற்கை உலகம் திறந்த, நேரடியாக அனுபவிக்கின்ற மற்றும் புத்துருவாக்க தன்மை கொண்ட நயத்தலை மனிதர்களுக்கு வழங்குகின்றது என இப்பேன் வாதிடுகின்றார். இயற்கை உலகின் அழகியல் அனுபவத்தினை நாம் சரியான வகையில் உணர்ந்துகொள்ள வேண்டுமானால் திறந்த, நேரடியாக அனுபவிக்கின்ற மற்றும் புத்துருவாக்க தன்மை கொண்ட அழகியல் ரீதியான நயத்தல் ஆனது இயற்கை உலகின் இயல்பு பற்றிய சரியான புரிதல் மூலம் வழிநடத்தப்பட வேண்டும் என்ற கருத்தினை இவர் முன்வைக்கின்றார். கலை பற்றிய அழகியல் சார்ந்த நயத்தல் போலவே இயற்கை உலகு பற்றிய நயத்தலும் உயர்ந்த அழகியல் அனுபவத்தைக் கொண்டது என்ற கருத்தினை இப்பேன் பதிவு செய்திருந்தார். இயற்கைச் சூழலின் அழகியல் நிலை தொடர்பாக தொடர்ச்சியாக எழுந்துவரும் பொதுவான கருத்துக்களுக்கும் விமர்சனங்களுக்கும் முகம்கொடுக்கும் முகமாக இக்காலப்பகுதியில் பல்வேறுபட்ட எதிர்வினைகள் முன்வைக்கப்பட்டன. ஆயினும் இவை குறிப்பிடத்தக்களவு முக்கியத்துவம் உடையதாக இருக்கவில்லை. கோட்பாட்டு ரீதியான பலவீனமான சூழ்நிலை காணப் பட்டதுடன் பிரயோக ரீதியான கள ஆய்வுகள் சில முன்வைக்கப்பட்டிருந்தன. இந்நிலை தொடர்பாக அனுபவரீதியான ஆராய்ச்சிகள் கோட்பாட்டு

கலை பற்றிய அழகியல் சார்ந்த நயத்தல் போலவே இயற்கை உலகு பற்றிய நயத்தலும் உயர்ந்த அழகியல் அனுபவத்தைக் கொண்டது என்ற கருத்தினை இப்பேன் பதிவு செய்திருந்தார்.

ரீதியான வெற்றிடத்தைக் கொண்டிருப்பதாக விமர்சிக்கப்பட்டது. இத்தகைய விமர்சனங்களுக்கு முகம்கொடுக்கும் முகமாக சில கோட் பாட்டு ரீதியான மாதிரிகள் முன்வைக்கப்பட்டன. ஆயினும் இத்தகைய நடவடிக்கைகள் இப்பேனின் சிந்தனைகளின் எல்லைகளைத் தாண்டிச் சென்றிருக்கவில்லை எனலாம்.

## நேரடி அனுபவ அழகியல் (Aesthetic of Engagement) (கட்டளை படிமம் - III)

இயற்கை உலகு மற்றும் கலையினை நயத்தல் தொடர்பாக ஏற்கனவே இரண்டு கட்டளை படிமங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. இதில் முதலாவது கட்டளை படிமம் இயற்கை சூழல் மற்றும் கலை ஆகிய இரண்டினையும் நயத்தலுடன் தொடர்புபட்டதாகவும் இரண்டாவது கட்டளை படிமம் கலையுடன் மட்டும் தொடர்புபட்டதாகவும் காணப்பட்டது. இத்தகைய சூழ்நிலையில் இயற்கை சூழலை அழகியல் ரீதியாக நயத்தல் தொடர்பாக பொதுமக்கள் மற்றும் பல்வேறு தரப்பினரிடம் இருந்து விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. இப்பேனின் கருத்துக்கள் இயற்கை சூழல் மற்றும் கலை ஆகிய இரண்டையும் இணைத்து அழகியல் ரீதியான நயத்தலுக்கு ஒரு கோட்பாட்டு ரீதியான அடிப்படை உருவாக வழிவகுத்தது. இவ்வகையில் இப்பேனின் கருத்துக்களை அடிப்படையாக கொண்டு மூன்றாவது கட்டளை படிமமான நேரடி அழகியல் அனுபவம் உருவாக்கப்பட்டது. இதன் உருவாக்கத்திற்கு பேர்லெண்ட் என்பவர் முக்கிய பங்களிப்பினை செய்துள்ளார். இந்த கட்டளை படிமம் அழகியல் வரலாற்றில் ஏற்கனவே தோன்றிய கட்டளை படிமங்களைக் காட்டிலும் அதிகம் சூழலியல் அழகியலின் நயத்தலை உள்ளடக்கியதாக காணப்படுகிறது. இது இயற்கை மற்றும் கலை ஆகிய இரண்டினதும் நயத்தலை உள்ளடக்கியுள்ளது. இது அழகியல் நயத்தலில் பாரம்பரியமாக காணப்பட்டு வந்த இரட்டை நிலைகளை கேள்விக்குறி ஆக்குகின்றது. மனம் மற்றும் புறப்பொருள், நயப்பவர் மற்றும் நயக்கப்படும் பொருள் என்ற இரண்டு நிலைகளுக்கிடையிலான இடைவெளியினை குறைத்தல், முழுமையாக நோக்குதல் மற்றும் நயப்பவர் ஒன்றுக்கு மேற்பட்ட புலன்களை நயத்தலில் பயன்படுத்தி நயக்கப்படும் பொருளோடு ஒன்றித்தல் போன்ற கூறுகளை கொண்டதாக இந்த கட்டளை படிமம் காணப்படுகின்றது. இந்த கட்டளை படிமமானது கலை அல்லது இயற்கையின் எல்லைகளையும் கடந்து எந்த ஒரு சூழ்நிலைக்கும் (மனிதனாலும் உருவாக்கப்பட்ட) பொருத்தமானதாக காணப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

இப்பேனின் கருத்துக்கள் இயற்கை சூழல் மற்றும் கலை ஆகிய இரண்டையும் இணைத்து அழகியல் ரீதியான நயத்தலுக்கு ஒரு கோட்பாட்டு ரீதியான அடிப்படை உருவாக வழிவகுத்தது.

நேரடி அனுபவ அழகியல் கட்டளை படிமமானது சூழ்நிலை அழகியலின் நயத்தலின் பல்வேறு பரிமாணங்களை எமக்கு எடுத்துக்காட்டுகிறது. ஒரு சூழ்நிலையினை அனுபவிக்கச் செல்லும் போது குறிப்பிட்ட சூழ்நிலையுடன் நாம் ஒன்றிப்போகின்றோம். இங்கு பல்வேறு உணர்வுகள், அனுபவங்கள், புதிரான, புரிந்துகொள்ள

முடியாத பல விடயங்களை நாம் அனுபவிக்கிறோம். எடுத்துக்காட்டாக ஒரு பூங்கா அல்லது கோயிலுக்குச் செல்லும் போது ஏற்படும் அனுபவங்கள் கட்புல காட்டி கூறுகளை மட்டுமல்லாமல் தொடு உணர்வு சார்ந்த விடயங்கள், அந்த சூழ்நிலைகளில் எழும் பல்வேறு ஒலிகள், இன்னும் பல என எண்ணற்ற விடயங்களை நாம் அனுபவிக்கிறோம். இவ்வகையில் பாரம்பரியமாக அழகியல் ரீதியான நயத்தல் அணுகு முறையில் இருந்து அதிகம் வேறுபட்ட பரிமாணங்களை சூழலியல் அழகியலுடன் தொடர்புபட்ட வகையில் நேரடி அனுபவ அழகியல் கட்டளை படிமமானது எமக்கு வழங்குகிறது. மேலும் ஒரு சூழ்நிலையின் பல கூறுகள் எமக்கு புரிந்துகொள்ள முடியாத அனுபவங்களையும் ஆச்சரியத்தினையும் ஏற்படுத்தலாம் என்று நம்பப்படுகிறது. இது காண்டின் இயற்கை உலகு பற்றிய அளவிட முடியா அழகு என்ற கருத்தினை ஞாபகப்படுத்துகின்றது. (பிரேம்குமார், மேலைநாட்டு அழகியல், பக்- *57-59*) இவ்வாறாக கலை மற்றும் இயற்கை சூழல் என்ற இரண்டையும் ஒன்றிணைத்து இயற்கை சூழலின் பல்வேறு பரிமாணங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து உருவாக்கப்பட்ட மூன்றாவது கட்டளை படிமம் சூழலியல் நயத்தல் தொடர்பாக எழும் பிரச்சினைகளை முழுமையாக தீர்க்கவில்லை என்று குறிப்பிடப்படுகிறது. இந்த மூன்றாவது கட்டளை படிமம் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் முன்வைக்கப்படுகின்றன.

இவ்வகையில் பாரம்பரியமாக அழகியல் ரீதியான நயத்தல் அணுகு முறையில் இருந்து அதிகம் வேறுபட்ட பரிமாணங்களை சூழலியல் அழகியலுடன் தொடர்புபட்ட வகையில் நேரடி அனுபவ அழகியல் கட்டளை படிமமானது எமக்கு வழங்குகிறது.

1. முதலாவது கட்டளை படிமத்தின் புலன்சார்ந்த மற்றும் வடிவம் சார்ந்த கூறுகளையே இந்த கட்டளை படிமமும் பிரதிபலிக்கின்றது.
2. இந்த கட்டளை படிமம் இயற்கையுடன் தொடர்புபட்டவகையில் அழகியல் சார்ந்த நயத்தல் என்பது அடிப்படையில் அகவயமானது மற்றும் பெறுமதி குறைந்தது என்று சூழலியலாளர்கள் மற்றும் ஏனையோர் மத்தியில் காணப்பட்ட ஐயப்பாடுகளை முழுமையாக போக்கியிருக்கவில்லை
3. இந்த கட்டளை படிமம் கலை உலகத்திற்கும் கலை அல்லாத உலகிற்கும் இடையில் உள்ள வேறுபாட்டினை தொடர்ச்சியாக பேணி வந்தது.

மேற்குறிப்பிட்ட காரணங்கள் சூழலியல் அழகியல் தொடர்பில் புதிய கட்டளை படிமம் உருவாக வழிவகுத்தது.

### அறிகை நிலை அணுகுமுறை (Cognitive Approach) (கட்டளை படிமம் - IV)

இந்த கட்டளை படிமத்துடன் தொடர்புபட்டவகையில் கால்சன் (Carlson) முக்கியத்துவம் பெறுகிறார். இவரின் கருத்துப்படி அழகியல் நயத்தல் என்பது புலன்கள் மற்றும் வடிவம் சார்ந்த கூறுகளுக்கோ அல்லது பெறுமதி குறைந்த அகவயத்தன்மைக்கோ சுருக்கிவிட முடியாது என குறிப்பிடுகிறார். இந்த கட்டளை படிமம் இயற்கை சூழல் சார்ந்த

விஞ்ஞான அறிவு மற்றும் விஞ்ஞான அறிவினை அடிப்படையாக கொண்ட ஒழுக்க அறிவு என்பவற்றை உள்ளடக்கியதாக காணப்படுகிறது. நாம் அனுபவிக்கும் இயற்கை சூழ்நிலையினை அதன் உண்மை இயல்பின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளும் அறிவினை இது குறிக் கின்றது. அழகியல் நயத்தலுடன் தொடர்புபட்டவகையில் இக்கட்டளை படிமத்தை பின்வருமாறு குறிப்பிட முடியும்.

முக்கியமான முறையான கலையின் அழகியலை நயத்தலில் கலைசார்ந்த வரலாற்று மரபுகள் மற்றும் கலை – விமர்சன ரீதியான வழக்காறுகள் என்பவற்றின் மூலம் அறிகை நிலை ரீதியாக உள்ளடக்கும் அதேவேளை முக்கியமான முறையான இயற்கையின் அழகியல் ரீதியான நயத்தல் என்பது இயற்கை வரலாறு – கலாசாரம் மற்றும் விஞ்ஞான ரீதியான தொடர்புபட்டவகையில் அறிகை நிலை ரீதியாக உள்ளடக்கியிருக்க வேண்டும். இவ்வகையில் இயற்கை உலகின் அழகியல் ரீதியான நயத்தல் என்பது விஞ்ஞானங்களான புவியியல், உயிரியல் மற்றும் சூழலியல் வழங்கும் அறிவினால் உயர்ந்த நிலையினை அடைகிறது. இதனால் இயற்கையை அடிப்படையாகக் கொண்ட அழகியல் ரீதியான நயத்தல் சுற்றுசூழல் சார்ந்த ஒருங்கிசைவுத் தன்மை மற்றும் ஸ்திரத்தன்மை என்ற கருத்துக்களுடன் இணைந்து செல்கிறது. இங்கு இயற்கையின் அழகு சுற்றுச் சூழல் சார்ந்த விஞ்ஞான அறிவுடன் இணைக்கப்படுகிறது.

இவ்வகையில் இயற்கை உலகின் அழகியல் ரீதியான நயத்தல் என்பது விஞ்ஞானங் களான புவியியல், உயிரியல் மற்றும் சூழலியல் வழங்கும் அறிவினால் உயர்ந்த நிலையினை அடைகிறது.

மேலும் இயற்கையினை அழகியல் ரீதியாக நயத்தல் என்பது இயற்கை சுற்றுச்சூழல் (Ecology) தொடர்பாக மனிதர்களின் ஒழுக்க ரீதியான கடமை உணர்வினை உள்ளடக்குவதாக உள்ளது. இவ்வகையில் இயற்கையினை அழகியல் ரீதியாக நயத்தல் மெய்யியலின் பகுதிகளான அறிவாராட்சி இயல் மற்றும் ஒழுக்கவியல் என்பவைகளுடன் இணைக்கப் படுகின்றது. சுற்றுச் சூழலுடன் தொடர்புபட்டவகையில் விஞ்ஞான ரீதியான அறிவு இயற்கையினை அழகியல் ரீதியாக நயத்தலின் முக்கிய பங்கினை வகிக்கின்றது. இற்றை நாள் வரை அழகியல் ரீதியான நயத்தலில் அறியப்படாத விடயங்களை இது அறிமுகப்படுத்து கின்றது. இயற்கையினை அழகியல் ரீதியாக நயத்தலின் மிகவும் உயர்ந்த நிலையினை இது கொண்டுள்ளது. சுற்றுச்சூழல் மற்றும் இயற்கையினை புதிய நோக்கில் நோக்குகின்ற அறிவினை இந்த அணுகுமுறை எமக்கு தருகின்றது என்பதுடன் அழகியல் ரீதியான நயத்தலில் ஒரு புதிய பரிமாணத்தை இது எமக்கு அறிமுக்கப்படுத்துகின்றது. இந்த நோக்கு மனித நல்வாழ்விற்கும் இயற்கையின் பாதுகாப்பிற்கும் உறுதுணையாக காணப்படுகின்றது.

சுற்றுச்சூழல் அழகியல் (Ecology Aesthetic) என்ற கருத்து இந்த அணுகுமுறையில் உள்ளடங்குகின்றது. நகரங்கள், பூங்காக்கள் மற்றும் கட்டிட அமைப்பு மதிப்பீட்டாளர்கள், திட்டமிடலாளர்கள் வடிவமைப் பாளர்கள் என்பவர்களுக்கு சூழலியலின் அழகியல் பண்பு தொடர்பாக சாதாரண மக்கள் கொண்டிருக்கும் கருத்துக்கள் மற்றும் பிரச்சினைகள்

தொடர்பாக பேசுவதற்கு ஒரு வாய்ப்பினை இந்த அணுகுமுறை வழங்கியுள்ளது. மேலும் சுற்றுச்சூழல் சார்ந்த அழகியல் நயத்தலுக்கு இந்த அணுகுமுறை ஒரு கோட்பாட்டு ரீதியான அடிப்படையினை வழங்குகின்றது. இந்த அணுகுமுறை அழகியல் ரீதியான இயற்கை நயத்தல் புறவயமானது மற்றும் பெறுமதி உடையது என்ற பண்புகளை வழங்குவதுடன் சூழலியலாளர்களின் கவலைகளையும் போக்குகின்றது. விஞ்ஞான அறிவின் உதவியுடன் செயற்படுகின்ற இது இயற்கை சார்ந்த அழகியல் சார்ந்த நயத்தல் நேர்க்காட்சிவாத அழகியல் (Positive Aesthetic) என்று அழைக்கப்படுகின்றது. இந்த நோக்கின்படி மனிதர்களின் செயற்பாட்டிற்கு உட்படாத தூய இயற்கை உலகம் அடிப்படையான நேர்க்காட்சிவாத அழகியல் பண்புகளைக் கொண்டதாக கருதப்படுகின்றது. அழகியலின் நயத்தலுக்கு உட்படும் இயற்கை உலகம் ஒழுங்கு, சமனிலை, ஒற்றுமைத் தன்மை, ஒருங்கிசைவுத்தன்மை போன்ற பண்புகளைக் கொண்டு காணப்படுகின்றது. பரந்தளவில் விஞ்ஞான ரீதியான அறிவினைத் தரும் இந்த அணுகுமுறை விஞ்ஞானம் தரும் அறிவினைக்காட்டிலும் அதிக அறிவினைத் தருவதாக அறிஞர்கள் கருதுகின்றனர். ஏன் இயற்கை இருக்கின்றது? அது என்னவாக உள்ளது? அது எதைப்போல இருக்கின்றது? போன்ற கேள்விகளைக் கேட்டு விடையளிக்கும் முயற்சியில் இந்த அணுகுமுறை ஈடுபட்டுள்ளது. எடுத்துக்காட்டாக ஒரு விவசாய நிலத்தினை எடுத்துக்கொண்டால் அது தொடர்பாக பின்வரும் விடயங்களை நாம் அறிந்துகொள்ள வேண்டி யிருக்கும். அவை எவை போல இருக்கின்றன? அவை ஏன் அப்படி இருக்கின்றன? அவற்றின் வரலாறுகள் மற்றும் செயற்பாடுகள் யாவை? எமது வாழ்க்கையில் அவற்றின் பங்களிப்புக்கள் யாவை?

இயற்கை சூழல் பற்றிய இத்தகைய கேள்விகள் பின்வரும் சூழல் களுக்கும் பொருந்தும்: கிராமப்புற சூழல், நகர்புற சூழல் மற்றும் எமது தனிப்பட்ட வாழ்க்கை சூழல். சூழலியல் அழகியல் தனது ஆய்வுப்பரப்புக்குள் பூங்காக்கள் கட்டிட நிர்மாணம், வாழ்விடப் பிரதேச சுற்றுச்சூழல் (Landscape Ecology), கலாசார புவியியல் (Cultural Geography), வாழ்விடப் பிரதேச விமர்சனம் (Landscape Criticism) என்பவற்றை உள்ளடக்குகின்றது.

விஞ்ஞான ரீதியான அறிவின் அடிப்படையில் இயற்கை உலகினை அல்லது சூழ்நிலையினை அழகியல் ரீதியாக நயத்தல் என்பது விஞ்ஞான அறிவினால் வழங்கப்படும் தகவல்களை அடிப்படையாக கொண்டிருப்பதாக மட்டும் அறிகை அணுகுமுறை காணப்படவில்லை. இந்த அணுகுமுறையில் விஞ்ஞான அறிவினால் வழங்கப்படும் தகவல் களுக்கு அப்பால் வழங்கப்படும் பல தகவல்களும் உள்ளடக்கப் பட்டுள்ளன. என்பது குறிப்பிடத்தக்கது. இயற்கை சூழலை விஞ்ஞான அறிவினால் வழங்கப்படும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு ஒருவர் அதனை அழகியல் ரீதியாக நயத்தலுடன் விஞ்ஞான அறிவினை தவிர்த்து வரலாறு மற்றும் கலாசார அறிவு வழங்கும் தகவல்களையும்

விஞ்ஞான ரீதியான அறிவின் அடிப்படையில் இயற்கை உலகினை அல்லது சூழ்நிலையினை அழகியல் ரீதியாக நயத்தல் என்பது விஞ்ஞான அறிவினால் வழங்கப்படும் தகவல்களை அடிப்படையாக கொண்டிருப்பதாக மட்டும் அறிகை அணுகுமுறை காணப்பட வில்லை.

கொண்டு இயற்கை சூழலை அழகியல் ரீதியாக நயத்தல் இடம் பெறுகின்றது. இத்தகைய அணுகுமுறையில் பல்வேறுபட்ட இலக்கியங் களில் விபரிக்கப்படும் இயற்கைசார்ந்த சூழ்நிலை அழகியல் ரீதியான நயத்தலுக்கு உள்ளடக்கப்படுகிறது. இயற்கை சூழ்நிலையினை அழகியல் ரீதியாக நயத்தல் செயன்முறையில் இலக்கியங்களுடன் திரைப்படங்கள் சூழலியல் கலை மற்றும் ஓவியங்கள் போன்றவற்றின் பங்களிப்புக்கள் எப்படி இருக்கின்றன என்ற விடயம் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய ஆய்வுகள் அழகியல் ரீதியான கலை மற்றும் இயற்கையினை நயத்தல் தொடர்பாக காணப்படும் பழைய கட்டளைப் படிமங்களுக்கு அப்பால்பட்டவகையில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இயற்கை சூழலை அழகியல் ரீதியாக நயத்தலில் புனைகதையியல் மற்றும் சமயங்களின் செல்வாக்கு பௌதீக அதீதம் என்பன இந்த அணுகு முறையில் உள்ளடக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக இயற்கை சூழலை அழகியல் ரீதியாக நயத்தல் தொடர்பாக கிறிஸ்தவம் மற்றும் பௌத்தம் போன்றவற்றின் செல்வாக்கை பல அறிஞர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். இத்தகைய நயத்தல் என்பது பன்மைத்தன்மை கொண்டதாகவும் சார்புத்தன்மை கொண்டதாகவும் காணப்படுகின்றது. இந்த அணுகு முறைக்கு விஞ்ஞான அறிவு வழங்கும் பொதுமையான மற்றும் புறவயமான அறிவினைப் போல் புறவயமான மற்றும் பொதுமையான அறிவினை வழங்கக் கூடிய ஆற்றல் கலாசார மற்றும் வரலாற்று ரீதியான அறிவுக்கு இருப்பதாக இப்பேன் கருதுகிறார் (Carlson, 2001: 432). இதனை அவர் பௌதீக அதீத கற்பனை (Metaphysical Emagination) என அழைக்கிறார். பௌதீக அதீத கற்பனை என்பது இயற்கை உலகினை கற்பனை ரீதியாகவும் மெய்யியல் ரீதியாகவும் நோக்குவதைக் குறிக்கும் (u;epburn, 1996: P-192). எடுத்துக்காட்டாக “காக்கைச் சிறகினிலே நந்தலாலா நின்றன் கரிய நிறம் தோன்றுதயே நந்தலாலா…” என்ற பாரதியின் பாடல் வரிகள் இயற்கையினைக் கடவுளாகப் பார்க்கும் பௌதீக அதீத கற்பனைக்கு தக்க உதாரணமாகும். இந்த பிரபஞ்சத்தில் மனிதனின் நிலை, அவனது இடம் மற்றும் வாழ்வின் அர்த்தம் என்ற பௌதீக அதீத பொருள் கொள்ளல்களை எமது மனம் உலகினை அடிப்படையாகக்கொண்டு உருவாக்குகின்றது. இதனை பௌதீக அதீத கற்பனை என இப்பேன் அழைக்கிறார். எடுத்துக்காட்டாக பூக்கள் மலர்ந்து உதிர்தல் எமக்கு வாழ்வின் நிலையாமையினை உணர்த்துகின்றது. இது இந்திய சமூகங்களுக்கு மட்டும் இன்றி உலகின் பல சமூகங்களுக்கும் வாழ்வின் உண்மைகளை உணர்த்தும் நிகழ்வாக காணப்படுகின்றது.

இயற்கை சூழலை அழகியல் ரீதியாக நயத்தலில் புனைகதையியல் மற்றும் சமயங்களின் செல்வாக்கு பௌதீக அதீதம் என்பன இந்த அணுகு முறையில் உள்ளடக்கப் படுகின்றன.

இந்த கட்டளை படிமம் (IV) அழகியல் ரீதியாக நயத்தலில் கலை மற்றும் இயற்கை ஆகிய இரண்டு பெரும் பிரிவுகளையும் உள்ளடக்கு கின்றது. மேலும் இது அழகியல் ரீதியாக நயத்தலில் பாரம்பரிய பண்புகளைக் கடந்து பல்வேறு பரிமாணங்களில் எல்லாவிதமான சூழ்நிலைகளையும் உள்ளடக்குகின்றது. இவ்வகையில் அழகியல் ரீதியாக நயத்தலில் இது ஒரு பெரும் வளர்ச்சியாகும். இவ்வகையில்:

கிராமப்புற சூழ்நிலை, நகரச் சூழ்நிலை, கேளிக்கைப் பூங்காக்கள், பெரும் விற்பனை நிலையங்கள், அடர்ந்த காடுகள், பரந்த விவசாய நிலங்கள், தனிப்பட்ட அலுவலகங்கள், வீடுகள் மற்றும் எமது காட்சி களுக்கும் சிந்தனைகளுக்கும் உட்படும் கட்டிடங்களும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களையும் உள்ளடக்குவதாக சூழலியல் அழகியல் காணப்படுகின்றது.

## பேண்தகு அபிவிருத்தியும் (Sustainable Development) சூழலியல் அழகியலும்

பேண்தகு அபிவிருத்தி பற்றிய முக்கியமான சிந்தனைகளை விமர்சனக் கோட்பாட்டு சிந்தனையாளர்களிடம் காண முடிகின்றது. பிரண்ட்லண்ட் அறிக்கை (Brundtland report) இதனை தெளிவுபடுத்துகின்றது. பேண்தகு அபிவிருத்தி என்பது பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்தப்படுகிறது: "பேண்தகு அபிவிருத்தி என்பது எதிர்கால மனித சமூகம் தமது தேவைகளை பூர்த்தி செய்வதில் எந்தவிதமான பிரச்சினைகளையும் எதிர்கொள்ளாமல் தற்போதைய மனித சமூகம் தமது தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளும் நிலையினைக் குறிக்கின்றது" (பிரண்டலண்ட், அத்தியாயம் 2.1:41). நாம் தற்போது கொண்டிருக்கும் மனித ஆதிக்கம் பெற்ற நடத்தைகள், விழுமியங்கள், வாழ்க்கை முறைகள் என்பவற்றை மாற்றி இயற்கையோடு இணைந்த மனித நடத்தைகள், விழுமியங்கள், வாழ்க்கை முறைகள் என்பவற்றைக் கைக்கொள்ள வேண்டும் என பேண்தகு அபிவிருத்திசார் அறிஞர்கள் வற்புறுத்துகின்றனர் (போல் ஹொப்பர், 2012:221). இயற்கை வளங்களைப் பாதுகாத்து அதனை அடுத்த தலைமுறையினருக்கு கொண்டு சேர்த்தல், இயற்கை வளங்களை குறைந்த அளவில் பயன்படுத்துதல், இயற்கைச் சூழலைப் பாதுகாத்தல் போன்ற விடயங்கள் பேண்தகு அபிவிருத்தியில் உள்ளடக்கப்படுகின்றன. இந்த அடிப்படையில் சூழலியல் அழகியல் என்பது அறிகைநிலை அணுகுமுறை கலையினை மட்டும் அல்லாது. இயற்கைச் சூழ்நிலையினை அழகியல் ரீதியாக நயப்பதனை முழுமையாக அங்கீகரிக்கின்றது. இந்த அணுகுமுறை விஞ்ஞான ரீதியாகவும் கலாசார ரீதியாகவும் வரலாற்று ரீதியாகவும் இயற்கைச் சூழலை அழகியல் ரீதியாக நயக்க முடியும் என்று கூறுகின்றது. இயற்கை பற்றிய சரியான புரிதலுக்கும் அதன் பாதுகாப்பிற்கும் இந்த அணுகுமுறை வழிவகுக்கின்றது எனலாம். எடுத்துக்காட்டாக மிகிந்தலையில் பண்டைய பௌத்த விகாரைகள் அமைந்துள்ள சுற்றுச் சூழலில் மரங்கள் வெட்டப்படுவதில்லை, மிருகங்கள் மற்றும் பறவைகள் வேட்டையாடப்படுவதில்லை. இத்தகைய நடவடிக்கைகள் அரசினால் தடை செய்யப்பட்டுள்ளன. இங்கு சமய அல்லது பௌதீக அதீத அறிவு (கலாசார அறிவு) சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்கு உதவுகின்றது. அழகியல் ரீதியாக நயத்தலில் ஏனைய கட்டளைப் படிமங்கள் கலை அல்லது இயற்கை மனிதனின் இரசனைக்காகத்தான் என்ற நோக்கு ஆதிக்கம் பெற்றிருந்தது. ஆனால் அறிகைநிலை அணுகுமுறையானது விஞ்ஞான கலாசார மற்றும்

நாம் தற்போது கொண்டிருக்கும் மனித ஆதிக்கம் பெற்ற நடத்தைகள், விழுமியங்கள், வாழ்க்கை முறைகள் என்பவற்றை மாற்றி இயற்கையோடு இணைந்த மனித நடத்தைகள், விழுமியங்கள், வாழ்க்கை முறைகள் என்பவற்றைக் கைக்கொள்ள வேண்டும் என பேண்தகு அபிவிருத்திசார் அறிஞர்கள் வற்புறுத்துகின்றனர்

இந்த கட்டளைப் படிமம் இயற்கையினை மனிதர்கள் மிக உயர்ந்த நிலையில் புரிந்து கொள்வதற்கு உதவுகின்றது என்பதுடன் அழகியல் ரீதியாக நயத்தல் வரலாற்றில் ஒரு புதிய பரிமாணத் தினையும் வழங்குகின்றது என்பதை நாம் மறுக்க முடியாது.

வரலாற்று அறிவினை இயற்கைச் சூழலுடன் இணைப்பதுடன் மனித மையத்தன்மையினை அல்லது மனித ஆதிக்கத்தன்மையினை சற்றே குறைத்துவிட்டது எனலாம். இந்த கட்டளை படிமம் மனிதர்களை இயற்கையில் இருந்து இன்பத்தைப் பெறுபவர்களாக மட்டுமல்லாமல் இயற்கை பற்றிய சரியான புரிதல் மற்றும் அதனைப் பாதுகாக்கும் கட்டளைப் படிமம் ஆகவும் காணப்படுகின்றது. இந்த கட்டளைப் படிமம் இயற்கையினை மனிதர்கள் மிக உயர்ந்த நிலையில் புரிந்துகொள்வதற்கு உதவுகின்றது என்பதுடன் அழகியல் ரீதியாக நயத்தல் வரலாற்றில் ஒரு புதிய பரிமாணத்தினையும் வழங்குகின்றது என்பதை நாம் மறுக்க முடியாது.

**உசாத்துணைகள்**


Berleant, A., (1990), Art and Engagement: Philadelphia: Temple University Press.

............ (1992), The Aesthetics of Environment, Philadelphia: Temple University Press.

............. (2013), What is Aesthetic Engagement, Contemporary Aesthetics, http://www.contempaesthetics.org/newvolume/pages/article.pup?article ID=684.

Brundtland., Gro u;arlem( 1987) Our Common Future, the Commission on Environment and Development for the United Nations General Assembly.

Budd., Malcom., (1996), Aesthetic Appreciation of Nature, British Journal of Aesthetics,Vol.36,No. 3.

Carlson, A., (2001), Environmental Aesthetics in the Routledge Companion to Aesthetics, edited by Berys Gaut and Dominic McIverLopes, London: Routledge.

Godlovitch,S. (1994), "Icebreakers: Environmentalism and Natural Aesthetics," Journal of Applied Philosophy 11:15-30.

Hepburn, R.W. (1996), Landscape and Metaphysical Imagination, Environmental Values,5, No. 3, The White u;orse Press.

u;opper, Paul( 2012), Understanding Development , Issues and debates, Cambridge: polity Press.

Tuan, Y. (1974), Topophilia: A Study of Environmental Perception, Attitudes, and Values, Englewood Cliffs: Prentice Hall.